கோவையில் தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!







கோவையில் தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, வி.செந்தில்பாலாஜி, சு.முத்துச்சாமி, மு.கண்ணப்பன், பொங்கலூர் பழனிச்சாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, துணைப்பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், மாவட்டச்செயலாளர்கள் தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச் செல்வன், மேயர் ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, பிரகாஷ், எம்.எல்.ஏ.கள் ஜெயராமகிருஷ்ணன், வசந்தம் கார்த்திகேயன், தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரகுமார், தி.மு.க. மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

செயற்கையான மின் தட்டுப்பாட்டை உருவாக்கியது

அதானியிடம் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கத் தானா சி.எம்.சார்?

சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை.நவ.5. சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலை தளத்தில் கூறியிருப்பதாவது:-

கடந்த தி.மு.கழக ஆட்சியில் அனல், புனல், காற்றாலை மற்றும் சோலார் மின் உற்பத்தி மூலமும் நீண்டகால ஒப்பந்தம் மூலம் (ரூ4.91,ரூ5.50) குறைந்த விலையில் 2028,2029 வரை 2800MW மின்சாரம் வாங்கியதாலும் அதிக பட்சம் 21,800 MW மின்தேவையை முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மின்தட்டுப்பாடு, மின்வெட்டு இல்லாமலும் மற்றும் அதிக மின்கட்டண உயர்வு இல்லாமலும் நல்லாட்சி நடத்தியது நினைவிருக்கிறதா CM Sir?



த.வெ.க.ஆட்சிக்கு வந்ததும் TNEB க்கு சொந்தமான மின் உற்பத்தியை 30% மாக குறைத்தும், குறைந்தவிலை ஒப்பந்தத்திலுள்ள 1000 MW மின்சாரத்தை வாங்காமலும் செயற்கையான மின் தட்டுப்பாட்டை உருவாக்கி அதானியிடம் அதிக விலையில் யூனிட் 1க்கு ரூ41க்கு வாங்க துடிப்பதன் மர்மம் என்ன CM Sir?

தி.மு.கழக ஆட்சியில் உடன்குடியில் 660×2 MW மின்திட்டத்தையும், அதன் தேவைக்கு நிலக்கரி கொண்டு வருவதற்கு ரூ13,500 கோடியில் உருவாக்கப்பட்ட சிறு துறை முகத்தையும் அதானிக்கு அடிமாட்டு விலைக்கு கொடுக்க நினைப்பது அச்சமா? அல்லது ஆந்திரா ரெட்டிகேங்கின் திட்டமா CM Sir?

தி.மு.கழக ஆட்சியில் தன்னிறைவு பெற்ற மின்சார வாரியத்தை 6 மாத காலத்தில் ரூ2.5 இலட்சம் கோடிக்கு மேல் கடனாக்கி மேலும் அதானியிடம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கி கடனை அதிகப்படுத்தி சென்னை விமான நிலையம், தூத்துக்குடி துறைமுகம் போல் தமிழ் நாடு மின்சார வாரியத்தையும் அதானிக்கு வழங்க உங்கள் டெல்லி பிரதிநிதி வெங்கட்ரமணா பேசி முடித்துவிட்டாரா? அதற்காக கையூட்டு பெற்றதாக பேசப்படும் பல ஆயிரம் கோடி ரூபாயை எந்த நாட்டில் பதுக்கி வைத்துள்ளீர்கள் CM Sir.?.

தமிழ்நாட்டுமக்கள் மற்றும் மின்வாரிய ஊழியர்களின் கடின உழைப்பால் உருவாக்கப்பட்ட பல இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள மின் வாரியத்தை அதானிக்கு தாரைவார்க்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்பதை மறந்து விடாதீர்கள் CM Sir.?

இவ்வாறு அவர் தனது வலைதளத்தில் கூறியுள்ளார்.



நெல்லை மேற்கு மாவட்டம் கல்லிடைக் குறிச்சி பேரூர் கழகம் சார்பில் நடைபெற யிருக்கும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கல்லிடைக்குறிச்சி கோவிந்தசாமி திருமண மண்டபத்தில் பேரூர் செயலாளர் க.இசக்கிபாண்டியன் தலைமையில் பேரூர் அவைத்தலைவர் தங்கப்பன், துணைச் செயலாளர்கள் ராஜ்குமார், அகஸ்தியர், மஞ்சுளா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டப் பிரதிநிதி அனிபா வரவேற்றார். இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று விரைவில் நடைபெறவிருக்கும் அம்பை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, பிரேம் ஆனந்த் உள்பட ஒன்றிய, பேரூர், வார்டு, கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் BLA 2, BLC, கழக முன்னோடிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் பேரூர் பொருளாளர் ஜார்ஜ் ராபர்ட் நன்றி கூறினார்.

